**" கண்ணைக் காப்பது இமை "**
**" மண்ணைக் காப்பது மழை "**

## மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2007ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25-ம் நாள் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## சாதாரணக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

-------------

**திருக்குறள் :** **“மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்**
**பிறப்பொழுக்கங் குன்றக் கெடும் ”**

**பொருள் :** நாள்தோறும் ஓதிவரும் மறை நூலினை ஒரு நாள் மறக்க நேர்ந்தாலும், மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ளலாம். ஆனால் ஒழுக்கம் ஒரு தடவை தவறினாலும் முற்றிலும் கெட்டதாகவே மாறிவிடும்.

**ஆ)** **தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## <u>உறுதிமொழி</u>

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும், பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(செய்தி மற்றும் சுற்றுலாத்துறை அரசாணை (நிலை) எண்.245 நாள் 13.11.98)

**<u>மாமன்றத் தீர்மானம் எண்.1/ நாள். 25.4.2007</u>**

**<u>மேயர் அவர்கள் பிரேரபிக்கும் தீர்மானம்</u>**

**<u>மதுரை மாநகராட்சியில் நிதி பற்றாக்குறையாக இருப்பதால் அரசுக்கு செலுத்த வேண்டிய கடன் மற்றும் வட்டித் தொகைகளை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் விளம்பர வரி முழு வருவாய் முழுவதும் திரும்ப மாநகராட்சிக்கே வழங்க வேண்டும் என்றும் இன்னும் பல சலுகைகளை வழங்கக் கோரி மாநகராட்சியிலிருந்து, தமிழக அரசை கேட்டுக் கொள்ளப்பட்டது.</u>**

**<u>இந்தக் கோரிக்கைகளை தமிழக அரசு கனிவுடன் பரிசீலித்து உள்ளாட்சி நிறுவனங்களின் நிதிச் சுமைகளையும் அதன் செயல்பாடுகளையும் கருத்தில் கொண்டு 11.4.2007 முற்றும் 12.4.2007 அன்று நடைபெற்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானிய கோரிக்கையின் மீது மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் பல சலுகைகள் அறிவிக்கப்பட்டது. குறிப்பாக,</u>**

**<u>1) மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் அரசுக்கு செலுத்த வேண்டிய கடன் மற்றும் வட்டித் தொகை ரூ.793 கோடி ரத்து செய்யப்படுகிறது. (இதில் 31.3.2007 வரை அரசுக்கு மாநகராட்சி செலுத்த வேண்டிய அசல் தொகை ரூ.82.34 கோடி வட்டி ரூ.71.93 கோடி ஆக மொத்தம் ரூ.154.27 கோடி ரத்து செய்யப்படுகிறது. )</u>**

**<u>2) அங்கீகாரமற்ற காலிமனைகளை முறைப்படுத்த கால அவகாசம் 31.12.2007 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.</u>**

3) **வழிகாட்டு மதிப்பீட்டின்படி விதிக்கப்படும் காலிமனை வரியை மாற்றி மனையின் பரப்பளவுக்கு ஏற்றவாறு விதிக்கப்படும்.**

4) **அனைத்து நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு பொதுவான சட்டம் கொண்டுவரப்படும்.**

5) **விளம்பர பலகைகள் வரி முன்பு இருந்ததுபோல் மாற்றி முழுவருவாயும் அந்தந்த நகர்புற உள்ளாட்சிகளுக்கு வழங்கப்படும்.**

6) **மாநகராட்சிகளுக்கு சொந்தமான கடைகளை குத்தகைதாரர்கள் அல்லாத பிறர் தற்போது கடையை நடத்தி வந்தாலும் அவர்களுக்கு அனுமதி வழங்கி அவைகளை ஒருமுறை ஒழுங்குப்படுத்தப்படும்.**

7) **குத்தகை காலம் 3 ஆண்டுகளாக இருப்பதை 9 ஆண்டுகள் என்று மாற்றியமைக்கப்படுகிறது.**

**இதுபோன்ற பல சலுகைகள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.**

**இந்திய வரலாற்றில் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு இவ்வளவு சலுகைகளை அறிவித்துள்ள ஒரே அரசு நமது தமிழக அரசு. இவ்வாறு உள்ளாட்சி அமைப்புகளுக்கு பல சலுகைகளை வாரி வழங்கியுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர். கலைஞர் அவர்களுக்கும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் மதுரை மக்கள் சார்பிலும் மதுரை மாநகராட்சி மாமன்றம் சார்பிலும் என் சார்பிலும் துணைமேயர் சார்பிலும் உளமார்ந்த நன்றியை இம்மாமன்றம் தெரிவித்துக் கொள்கிறது.**

## 1) சி.டபிள்யு.3 / 39648 / 2006

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-1 விதி 19(2)ன் படி 21.3.2007ம் தேதி நடைபெற்ற வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் : 2**

**பதிவு செய்யப்பட்டது**

### மாமன்றத் தீர்மானம் எண். 3 / நாள். 25.4.2007

**மேயர் அவர்களின் தீர்மானம்**

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களது சட்டமன்ற உறுப்பினர் 50 ஆண்டுகால சேவையை பாராட்டி பொன்விழா ஆண்டு கொண்டாடும் இந்த வேளையில் பொன்விழா நினைவாக மதுரை மாநகராட்சியில் உள்ள நான்கு மண்டல பகுதிகளிலும் உள்ள நுழைவு வாயில்களில் ஒவ்வொன்று வீதம் டாக்டர் கலைஞர் பொன்விழா ஆண்டு நுழைவாயில் அமைக்க இம்மாமன்றம் ஏகமனதாக தீர்மானிக்கிறது.

### மாமன்றத் தீர்மானம் எண். 4 / நாள். 25.4.2007

**மேயர் அவர்களின் தீர்மானம்**

மதுரை கீழ் கோர்ட் மற்றும் உயர்நீதிமன்ற மதுரை கிளை மாநகராட்சி வழக்குகளை நடத்திவரும் மாநகராட்சி வழக்கறிஞர் திரு. என். முருகேசன் அவர்களை உயர்நீதிமன்ற மாநகராட்சி வழக்குகளில் ஆஜராவதிலிருந்து விடுவிக்குமாறு இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

### மாமன்றத் தீர்மானம் எண். 5 / நாள். 25.4.2007

**மேயர் அவர்களின் தீர்மானம்**

அரசு நியாய விலைக் கடைகளில் அரிசி வாங்கும்போது மற்ற பொருட்கள் வாங்க வேண்டும் என்று பொதுமக்களை வற்புறுத்துவதாக பெரும்பாலான மாமன்ற உறுப்பினர்கள் 25.4.2007 அன்று நடந்த மாமன்றக் கூட்டத்தில் தெரிவித்தனர். எனவே நியாயவிலைக் கடைகளில் அரிசி வாங்கும் பொதுமக்களிடம் மற்ற பொருட்களை வாங்க வற்புறுத்த வேண்டாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களை இம்மாமன்றம் கேட்டுக் கொள்கிறது.

## 2) சி.டபிள்யு.3 / 00478 / 2007

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-I விதி 19(2)ன் படி 22.3.2007ம் தேதி நடைபெற்ற நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் : 6**

**பதிவு செய்யப்பட்டது**

## 3) சி.டபிள்யு.3 / 39181/ 2006

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல் -1 விதி 19 (2)ன் படி 13.4.2007ம் தேதி நடைபெற்ற சுகாதாரக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : சுகாதாரக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் : 7**

**பதிவு செய்யப்பட்டது**

## 4) சி.டபிள்யு.3 / 39182/ 2006

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல் -1 விதி 19 (2)ன் படி 16.4.2007ம் தேதி நடைபெற்ற கல்விக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : கல்விக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் : 8**

**பதிவு செய்யப்பட்டது**

## 5) சி.டபிள்யு.3 / 00478 / 2007

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-I விதி 19(2)ன் படி 18.4.2007ம் தேதி நடைபெற்ற நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் : 9**

**பதிவு செய்யப்பட்டது**

## 6) ம.நி.1 / 09102 / 2007

மதுரை மாநகராட்சி துணை ஆணையாளர் பணியிடத்திற்கு, மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில், திரு. ஆ. இராமச்சந்திரன் அவர்களை பணி உயர்வில் மதுரை மாநகராட்சி துணை ஆணையாளராக பணியமர்த்தி வெளியிடப்பட்டுள்ள அரசாணை நிலை எண். 1043 பொது (சிறப்பு - ஏ) துறை, நாள்.21.3.2007-ஐ மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : திரு. ஆ. இராமச்சந்திரன், துணை ஆணையாளராக 28.3.2007-ந் தேதி முற்பகல் பணியேற்பு செய்துள்ளார்.

**மாமன்ற தீர்மானம் எண் : 10**

**பதிவு செய்யப்பட்டது**

## 7) ம.நி.2 / 5943 / 2007

அரசாணை எண். 42, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள். 12.3.2007-ல் 29.11.2001 முதல் 21.2.2006 வரை பணி நியமனங்களுக்கு தடையாணை இருந்த காரணத்தினால் கருணை அடிப்படையில் பணி வழங்கக் கோரும் மனுக்களை மேற்படி அரசாணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் பெற்றுக் கொள்ள அனுமதித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 11**

**பதிவு செய்யப்பட்டது. மேலும் தடையாணை அமுல்படுத்துவதற்கு முன், இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்கள் காலதாமதமாக கொடுத்த அனைத்து மனுக்களையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என மாமன்றம் தீர்மானிக்கிறது.**

## 8) பி.1 / 11161 / 2007

மதுரை மாநகராட்சிப் பணியாளர்களுக்கு அரசாணை எண். 100, நாள். 28.3.2007-ன்படி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதலுடன் அகவிலைப்படி நிலுவை வழங்கப்பட்டதற்கும், மேற்காணும் அரசாணையினை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** ஏற்கனவே வழங்கி வந்த 29% அகவிலைப்படி, 6% உயர்வு செய்து 35% ஆக வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் : 12**

**பதிவு செய்யப்பட்டது**

## 9) ம.பொ.5 / 39673 / 2006

மதுரை மாநகராட்சி வார்டு எண். 53-ல் மேல அனுப்பானடி ரயில்வே கேட் அருகில் மெயின் ரோட்டில் உள்ள கழிப்பறை பழுதடைந்தும், மக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேற்கண்ட கழிப்பறையை அகற்றுவதற்கு சுகாதாரக்குழு தீர்மானம் எண். 43, நாள். 20.12.2006-ல் குறிப்பு நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட கழிப்பறையை அகற்றுவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 13**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 10) ம.பொ.5 / 1997 / 2007

மதுரை மாநகராட்சி வார்டு எண்.6-ல் கே.கே.நகர் நியூ L.I.G. காலனியில் மாவட்ட அடிப்படை வசதி திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட நியாய விலை கடைக்கு மாத வாடகையாக ரூ.2595/- நிர்ணயம் செய்து மாவட்ட விநியோக அலுவலர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. தற்போது அக்கடையை இலவசமாக வழங்கி நியாய விலை கடை இயங்க அனுமதி வழங்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலிருந்து கடிதம் வந்துள்ளது. மேற்கண்ட கடைக்கு இலவசமாக அனுமதி வழங்குவது குறித்து மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 14**

**ஏற்கனவே ரூ.2595-ஆக நிர்ணயம் செய்த வாடகையை குறைத்து ரூ.700-ஆக மாத வாடகை நிர்ணயம் செய்து தீர்மானிக்கிறது.**

## 11) ந.பொ.1/30242/01

மதுரை மாநகரில் மத்திய அரசின் தேசிய நதி நீர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளில் கட்டம் - IV (Phase –IV) ல் வைகை நதியில் கலக்கும் கழிவு நீரினை வழிமறித்து நதிக்கரை வழியாக திருப்பி சுத்தகரிப்பு நிலையத்திற்கு கொண்டு சேர்க்க (Interception and Diversion of Sewage along River Vaigai) ரூ. 731.55 இலட்சத்திற்கு பொதுப்பணித் துறையினரால் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டு பணியை மேற்கொள்ள மத்திய அரசின் சுற்றுச் சூழல் & வனத்துறை அமைச்சகம் அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்குரிய மதிப்பீடு 2003-04 ம் ஆண்டு விலை விகிதத்தில் தயாரிக்கப்பட்டிருப்பதால் தற்போது 2006-07 ம் ஆண்டு விலை விகிதத்தில் திருத்திய மதிப்பீடு தயாரிக்கும் பட்சத்தில், திருத்திய மதிப்பீட்டுத் தொகை ரூ. 948.00 இலட்சங்களாகும் என்பதால் ரூ. 216.45 இலட்சங்கள் திட்டச் செலவு அதிகரிக்கும் என்றும் இக்கூடுதல் திட்டச் செலவை NRCD விதிகளின் படி மதுரை மாநகராட்சி ஏற்றுக் கொள்வது சம்பந்தமாக உத்திரவாதம் வழங்கும் படி பொதுப்பணித் துறையினரால் கோரப்பட்டுள்ளது.

பாதாள சாக்கடைத் திட்டத்தின் அத்தியாவசியத்தை கருதியும், பொதுமக்களின் நலனுக்காகவும், பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளை எவ்வித தங்கு தடையின்றி செயல்படுத்தும் பொருட்டும் கூடுதல் திட்டச் செலவுத் தொகை ரூ. 216.45 இலட்சங்களை மாநகராட்சி ஏற்றுக் கொள்ளுமென வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று தெரிவிக்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 15**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 12) B30 / 01582 / 2007

மதுரை மாநகராட்சி லாரி நிறுத்துமிடத்திற்கு தேவையான 37 வாகன ஓட்டுனர்களை ஒப்பந்த அடிப்படையில் சப்ளை செய்ய M/s. எக்ஸல் நீட் & டெடி ஏஜென்ஸி மதுரை நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட சப்ளை உத்திரவு காலம் முடிவடைந்து உள்ளதால் புதிதாக ஒப்பந்த அடிப்படையில் கனரக வாகன ஓட்டுனர்கள் சப்ளைக்கு தினசரி நாளிதழில் விளம்பரம் வெளியிட்டு டெண்டர் கோரப்பட்டது. வரப்பெற்ற மூன்று டெண்டர்களில் குறைந்த விலைவிகிதம் தந்துள்ள M/s. கிளின் கேர் சர்வீஸ் சென்டர் (க.எண். 23 C / 6 பெசன்ட் ரோடு, சின்ன சொக்கிகுளம், மதுரை - 2.) நிறுவனத்தாரின் விலைவிகிதம் மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயம் செய்துள்ள விலைவிகிதத்திற்கு கூடுதல் என்பதால் விலைவிகிதம் குறைத்து கொடுக்க கோரியதில் அன்னார் வாகன ஓட்டுநர் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 138/- (ரூபாய் நூற்றி முப்பத்தி எட்டு மட்டும்) க்கு ஒப்பந்த அடிப்படையில் சப்ளை செய்ய சம்மதம் கொடுத்துள்ளார்.

மேற்கண்ட விலைவிகிதத்தை ஏற்று வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று அன்னாருக்கு ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் 37 ஓட்டுனர்களை சப்ளை செய்ய உத்திரவு 16.04.2007 ல் வழங்கியதற்கு மாமன்றத்தின் பின்னேற்பைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 16**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 13) ம.பொ.6 / ம.எண்.1437/ 06

மதுரை மாநகராட்சி, மையப்பொறியியல் பிரிவு, தெற்கு மண்டலம் வார்டு எண் 41ல் சுந்தர்ராஜபுரத்தில் மார்கெட் கட்டிடம் கட்ட வார்டு உதவிப்பொறியாளரால் ரூ.23,50,000/-க்கு (ரூபாய் இருபத்தி மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப ஒப்புதல் பெறப்பட்டு, வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று, செய்திநாளிதழில் விளம்பரம் செய்து 21.03.07ல் டெண்டர் வரவழைக்கப்பட்டது. வரப்பெற்ற இரண்டு டெண்டர்களில் 2006 – 07ம் ஆண்டு மதிப்பீடு விலை விகிதத்திற்கு 1% சதவீதம் விலை குறைவாக கொடுத்துள்ள டெண்டரை ஏற்க மதிப்பாய்வுக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு, மேற்கண்ட டெண்டரை ஏற்பு செய்து மதிப்பாய்வு கமிட்டியில் தீர்மானிக்கப்பட்டது. 78, கோடாங்கி தோப்பு தெரு, திருப்பரங்குன்றம், மதுரை என்ற முகவரியில் உள்ள திரு.V.மகேந்திரன் ஒப்பந்ததாரருக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை துவங்கும் உத்தரவு வழங்கப்பட்டது. ஏற்கனவே பெறப்பட்டுள்ள வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல்களுக்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 17**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 14) ம.பொ.6 / ம.எண்.1726/ 05

மதுரை மாநகராட்சி மையப்பொறியியல் பிரிவு தெற்கு மண்டலம் வார்டு 33ல் மேலவெளி வீதி, மேலமாரட் வீதி இடையில் தெற்கு மண்டல அலுவலக தரைத்தளம் மற்றும் முதல் தளம் அமைக்க ரூ.24,90,000/-க்கு (ரூபாய் இருபத்தி நான்கு லட்சத்து தொன்னூராயிரம் மட்டும்) மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மாமன்றத் தீர்மானம் 54, நாள் : 29.06.06ல் ஒப்புதல் பெற்று டெண்டர் விடப்பட்டு, மாமன்றத் தீர்மானம் எண் 262, நாள் : 07.09.06ல் ஒப்புதல் பெற்று திரு.எம்.காசிராஜனுக்கு வேலை துவங்கும் உத்தரவு வழங்கி, அன்னார் வேலை தொடங்காததால், அன்னாரின் ஒப்பந்தபதிவு ரத்து செய்து கருப்புப்பட்டியலில் வைக்கப்பட்டுள்ளது. ஒப்புதல் செய்யப்பட்ட தொகைக்கும் திருத்திய மதிப்பீடு தயார் செய்து, வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று மறு டெண்டர் 16.03.07ல் வரவழைக்கப்பட்டது. வரப்பெற்ற இரண்டு டெண்டர்களில் மதிப்பீடு விலை விகிதத்திற்கு 4.98% அதிகம் விலைப்புள்ளி கொடுத்துள்ள கன்ஸ்ட்ரக்ஷன் இந்தியா நிறுவனத்தின் டெண்டரை ஏற்பு செய்து மதிப்பாய்வு கமிட்டியில் தீர்மானிக்கப்பட்டது. கன்ஸ்ட்ரக்ஷன் இந்தியா 72/178A, வடக்கு வெளிவீதி, மதுரை – 1 என்ற விலாசமிட்ட ஒப்பந்ததாரருக்கு வேலை துவங்கும் உத்தரவு வழங்கவும், ஏற்கனவே பெறப்பட்டுள்ள முன் ஒப்புதலுக்கும், மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 18**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**15) B30/ 31575 / 2005**

மதுரை மாநகராட்சி லாரி நிறுத்துமிடத்தில் உள்ள கண்டமான ஆர்சி புத்தகம் இல்லாத கீழ்கண்ட வாகனங்களை தற்போதுள்ள நிலையில் Scrap Value கணக்கிட்டு இதன் அடிப்படையில் ஏலம் / டெண்டர் மூலம் விற்பனை செய்ய மாமன்றத்தின் (தீர்மானம் எண் 84 – நாள் 29.06.06) ஒப்புதல் பெறப்பட்டு உள்ளது.

1. டிராக்டர் MDA 4868
2. டிராக்டர் TNU 1684
3. டிராக்டர் MDA 215
4. டிராக்டர் எண் இல்லை.
5. டிராக்டர் டிரெய்லர் MDA 4870
6. டிராக்டர் டிரெய்லர் பாடி பிரேம் மட்டும்.

மேற்கண்ட டிராக்டர் மற்றும் டிரெயிலர்களின் மொத்த எடையை (உத்தேசமாக 2500 கி) கணக்கில் கொள்ளப்பட்டு Scrap Value ஆக ரூ. 25,000 /- என நிர்ணயம் செய்யப்பட்டு அதன்படி ஏலம் / டெண்டர் மூலம் விற்பனை செய்ய நாளிதழில் உரிய விளம்பரம் வெளியிட்டு 27.03.07 இல் ஏலம் / டெண்டர் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு டெண்டர்களில் மற்ற டெண்டரின் விலை விகிதத்தினை விட கூடுதலாகவும் மாநகராட்சி மதிப்புக்கும் கூடதலாகவும் G. சுயம்புலிங்கம் (க.எண். 110 திலகர் திடல், தமிழ்ச்சங்கம் ரோடு, மதுரை - 1.) அவர்கள் கொடுத்துள்ள ரூ. 27,567/- (ரூபாய் இருபத்தி ஏழாயிரத்து ஐநூற்றி அறுபத்தி ஏழு மட்டும்) க்கான டெண்டர் விலை விகிதத்தினை ஏற்றுக்கொள்ளவும், டெண்டர் தொகையுடன் விற்பனை வரி சேர்த்து செலுத்திய பின்பு டெலிவரி கொடுக்கவும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 19**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**(ஒம்...) ஜி. தேன்மொழி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 19.4.2007**

*" தேக்குவீர் மழைநீரை – பாதுகாப்பீர் குடிநீரை "*

* * * * *

"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2007**ம் ஆண்டு **ஏப்ரல்** திங்கள் **25-ம்** நாள் **புதன்கிழமை** காலை **12.30** மணிக்கு

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

1) **சி.டபிள்யு.3 / 1436 / 2007**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-1 விதி 19(2)ன் படி 20.4.2007ம் தேதி நடைபெற்ற வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுக் கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுக் கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் : 20**
**பதிவு செய்யப்பட்டது**

2) **சி.டபிள்யு.3 / 0883 / 2007**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-1 விதி 19(2)ன் படி 23.4.2007ம் தேதி நடைபெற்ற வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் : 21**
**பதிவு செய்யப்பட்டது**

**3) B 30 / 2360 / 07**

மதுரை மாநகராட்சி தெருவிளக்கு பராமரிப்பிற்கு 2007 – 2008 ம் ஆண்டிற்கு தேவையான கீழ்காணும் தெருவிளக்கு சாமான்களை முன்னணி நிறுவனங்களிடமிருந்து டெண்டர் வரவழைத்து சப்ளை பெற்றுக் கொள்ளவும். அதற்கான உத்தேச செலவினம் ரூ.24,97,500/- க்கும் மாமன்றத்தின் (தீர்மானம் எண் 346 நாள் 31.01.2007) ஒப்புதல் பெறப்பட்டு ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளிதழ்களில் தமிழ்நாடு முழுவதும் டெண்டர் அறிவிப்பு விளம்பரம் வெளியிட்டு 28.02.07 ல் டெண்டர் கோரப்பட்டது. அதன் பேரில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து டெண்டர்கள் வரப்பட்டுள்ளது.

1) M/s. சபரி எலெக்ட்ரிக்கல்ஸ் சென்னை
2) M/s. எல்டன் எலெக்ட்ரிக்கல்ஸ் ஹரியானா
3) M/s. பாலாஜி எலெக்ட்ரிக்கல்ஸ் திருச்சி

மேற்கண்ட மூன்று டெண்டர்களின் தொழில்நுட்ப தகுதிகள் மதிப்பாய்வு குழுவின் முன்வைத்து பரிசீலனை செய்யப்புட்டதில் M/s.பாலாஜி எலெக்ட்ரிக்கல்ஸ் திருச்சி நிறுவனத்தார் தொழில் நுட்ப தகுதி பெறாத காரணத்தினால் மேற்கண்ட நிறுவனத்தினரை தவிர மற்ற இரண்டு டெண்டர்தாரர்களின் விலைவிகித "B"கவர் திறக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி விலைவிகிதம் "B" கவர் திறக்கப்பட்டு மதிப்பாய்வு குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டதில் மின் உபகரணங்களுக்காக குறைந்த விலைவிகிதம்

தந்துள்ள L1 டெண்டர்தாரர் M/s.எல்டன் எலெக்ட்ரிக்கல்ஸ் ஹரியானா நிறுவனத்தாரின் விலை விகிதத்தினை ஏற்று தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு மின்உபகரணங்கள் உடன் தேவை என்பதால் அவசர அவசியத்தை கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று சப்ளை உத்தரவு வழங்கியதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

| வ. எண் | மின் உபகரண விபரம் | ஒன்றின் விலை | எண்ணிக்கை | மொத்த தொகை |
|---|---|---|---|---|
| 1 | 70 W SV Lamp Standard Make. | 385.00 | 900 | 346500 |
| 2 | 150 W SV Lamp Standard Make. | 510.00 | 1500 | 765000 |
| 3 | 250 W SV Lamp Standard Make. | 575.00 | 2000 | 1150000 |
| 4 | 400 W SV Lamp Standard Make. | 720.00 | 150 | 108000 |

**மாமன்ற தீர்மானம் எண் : 22**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 4) B 30 / 2361 / 07

மதுரை மாநகராட்சி தெருவிளக்கு பராமரிப்பிற்கு 2007–2008 ம் ஆண்டிற்கு தேவையான கீழ்காணும் தெருவிளக்கு சாமான்களை முன்னணி நிறுவனங்களிடமிருந்து டெண்டர் வரவழைத்து சப்ளை பெற்றுக் கொள்ளவும். அதற்கான உத்தேச செலவினம் ரூ.24,08,500/-க்கும் மாமன்றத்தின் (தீர்மானம் எண் 347 நாள் 31.01.2007) ஒப்புதல் பெறப்பட்டு ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளிதழ்களில் தமிழ்நாடு முழுவதும் டெண்டர் அறிவிப்பு விளம்பரம் வெளியிட்டு 28.02.07 ல் டெண்டர் கோரப்பட்டது. அதன் பேரில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து டெண்டர்கள் வரப்பட்டுள்ளது.

1 M/s. சபரி எலெக்ட்ரிக்கல்ஸ் சென்னை
2 M/s. எல்டன் எலெக்ட்ரிக்கல்ஸ் ஹரியானா
3 M/s. பாலாஜி எலெக்ட்ரிக்கல்ஸ் திருச்சி

மேற்கண்ட மூன்று டெண்டர்களின் தொழில்நுட்ப தகுதிகள் மதிப்பாய்வு குழுவின் முன்வைத்து பரிசீலனை செய்யப்புட்டதில் ஆ,ள.பாலாஜி எலெக்ட்ரிக்கல்ஸ் திருச்சி நிறுவனத்தார் தொழில் நுட்ப தகுதி பெறாத காரணத்தினால் மேற்கண்ட நிறுவனத்தினரை தவிர மற்ற இரண்டு டெண்டர்தாரர்களின் விலைவிகித “B”கவர் திறக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி விலைவிகிதம் “B” கவர் திறக்கப்பட்டு மதிப்பாய்வு குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டதில் மின் உபகரணங்களுக்காக குறைந்த விலைவிகிதம் தந்துள்ள இரண்டு L1 டெண்டர்தாரர்களின் விலை விகிதத்தினை ஏற்று தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு மின்உபகரணங்கள் உடன் தேவை என்பதால் அவசர அவசியத்தை கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று சப்ளை உத்தரவு வழங்கியதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் முகவரி | மின் உபகரண விபரம் | ஒன்றின் விலை | எண்ணிக்கை | மொத்த தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | M/s. Sabhari Electricals Chennai | 40W Tube Lights Standard Make. | 41.37 | 32000 | 1323840 |
| 2 | “ | 40W Choke Standard Make. | 150.70 | 3000 | 452100 |
| 3 | | 40W Starter Standard Make. | 8.86 | 10000 | 76500 |
| 4 | “ | 11W CF Lamp direct Standard Make | 118.20 | 200 | 23640 |
| 5 | “ | 18W Lamp direct Standard Make. | 189.12 | 200 | 37824 |
| 6 | “ | 11W CF Lamp 2 pin type Standard Make. | 106.38 | 200 | 21276 |
| 7 | “ | 18W CF Lamp 2 pin type Standard Make. | 109.33 | 200 | 21866 |
| 8 | “ | 11W CFL Choke Standard Make. | 157.60 | 100 | 15760 |
| 9 | “ | 18W CFL choke Standard Make. | 177.30 | 100 | 17730 |
| 1 | M/S. Elton Electrical Pvt Ltd , Haryana | 250W MH Bulb Standard Make. | 1060.00 | 100 | 106000 |
| 2 | | 400W MH Bulb Standard Make. | 1120.00 | 250 | 280000 |

**மாமன்ற தீர்மானம் எண் : 23**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 5) B 30 / 2362 / 07

மதுரை மாநகராட்சி தெருவிளக்கு பராமரிப்பிற்கு 2007 – 2008 ம் ஆண்டிற்கு தேவையான கீழ்காணும் தெருவிளக்கு சாமான்களை முன்னணி நிறுவனங்களிடமிருந்து டெண்டர் வரவழைத்து சப்ளை பெற்றுக் கொள்ளவும். அதற்கான உத்தேச செலவினம் ரூ.24,52,500/- க்கும் மாமன்றத்தின் (தீர்மானம் எண் 348 நாள் 31.01.2007) ஒப்புதல் பெறப்பட்டு ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளிதழ்களில் தமிழ்நாடு முழுவதும் டெண்டர் அறிவிப்பு விளம்பரம் வெளியிட்டு 28.02.07 ல் டெண்டர் கோரப்பட்டது. அதன் பேரில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து டெண்டர்கள் வரப்பட்டுள்ளது

1) M/s. சபரி எலெக்ட்ரிக்கல்ஸ் சென்னை
2) M/s. எல்டன் எலெக்ட்ரிக்கல்ஸ் ஹரியானா
3) M/s. பாலாஜி எலெக்ட்ரிக்கல்ஸ் திருச்சி

மேற்கண்ட மூன்று டெண்டர்களின் தொழில்நுட்ப தகுதிகள் மதிப்பாய்வு குழுவின் முன்வைத்து பரிசீலனை செய்யப்புட்டதில் M/s.பாலாஜி எலெக்ட்ரிக்கல்ஸ் திருச்சி நிறுவனத்தார் தொழில் நுட்ப தகுதி பெறாத காரணத்தினால் மேற்கண்ட நிறுவனத்தினரை தவிர மற்ற இரண்டு டெண்டர்தாரர்களின் விலைவிகித "B"கவர் திறக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி விலைவிகிதம் "B" கவர் திறக்கப்பட்டு மதிப்பாய்வு குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டதில் மின் உபகரணங்களுக்காக குறைந்த விலைவிகிதம் தந்துள்ள இரண்டு L1 டெண்டர்தாரர்களின் விலை விகிதத்தினை ஏற்று தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு மின்உபகரணங்கள் உடன் தேவை என்பதால் அவசர அவசியத்தை கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று சப்ளை உத்தரவு வழங்கியதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் , முகவரி | மின் உபகரண விபரம் | ஒன்றின் விலை | எண்ணிக்கை | மொத்த தொகை |
|---|---|---|---|---|---|
| **1** | **M/s. Sabhari Electricals Chennai** | 70W SVL Choke Standard Make. | **540.00** | **500** | **270000** |
| **2** | " | 150 W SVL Choke Standard Make. | **795.00** | **1000** | **795000** |
| **3** | " | 250W SVL Choke Standard Make. | **840.00** | **1150** | **966000** |
| **4** | " | 400W SVL Choke Standard Make. | **1170.00** | **100** | **117000** |
| **1** | **M/s. Elton Electricals Haryana** | SVL Ignitor Standard Make. | **82.00** | **3000** | **246000** |

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 24</u>**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 6) HF1/ 38634/ 05

மதுரை மாநகராட்சி நலவாழ்வு மையம் எண்.10-ல் பணிபுரிந்து வரும் திருமதி.ஆர்.ஜெயலெட்சுமி பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் அவரது குடும்ப சூழ்நிலை காரணமாக, விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒருவழிப்பணி மாறுதல் செய்யக் கோரி மனு செய்துள்ளதின் பேரில் அவரை பணி மாறுதல் செய்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

1. மேற்படி ஒருவழிப் பணிமாறுதல் அரசின் உரிய ஆணை பெற்ற பின்னரே ஏற்கலாம்.
2. மேற்படி ஒருவழிப்பணிமாறுதல் தொடர்பாக பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 25</u>**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 7) Jn.S.1/ 36765 / 07

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு குடிசை வீடுகளில் வசிக்கும் மக்களுக்கு புதிதாக கான்கிரீட் வீடுகள் கட்டித் தருதல் மற்றும் அப்பகுதிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேற்கொண்டு குடிசை வாழ் பகுதிகளை பிற பகுதிகளுக்கு இணையாக மேம்படுத்தும் திட்டத்தை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படவுள்ளது. இதில் முதற்கட்டமாக 21 குடிசைப் பகுதிகளில் ரூ. 2313.80 இலட்ச மதிப்பீட்டுத் தொகையில் 2515 எண்ணிக்கையில் கான்கிரீட் வீடுகளும் மற்றும் பிற உட்கட்டமைப்பு பணிகள் ரூ. 372.14 இலட்ச மதிப்பீட்டு தொகையிலும் ஆக மொத்தம்

ரூ. 2685.94 இலட்சமாகும். இரண்டாம் கட்டமாக 58 குடிசைப் பகுதிகளில் ரூ. 8797.96 இலட்ச மதிப்பீட்டு தொகையில் 9583 எண்ணிக்கையில் கான்கிரீட் வீடுகளும் மற்றும் பிற உட்கட்டமைப்பு பணிகள் ரூ. 1559.86 இலட்ச மதிப்பீட்டு தொகையில் ஆக மொத்தம் ரூ. 10357.82 இலட்சத்தில் மத்திய அனுமதி மற்றும் கண்காணிப்புக் குழுவின் மூலம் 02.02.07 & 27.02.07 ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட திட்டப் பணிகளை ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் 50% மத்திய அரசு மானியமாகவும் 20% மாநில அரசு மானியமாகவும் 30% மாநகராட்சி மற்றும் பயனாளிகள் மூலம் பெற்று நிறைவேற்றப்பட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்த முறையில் புதிய வீடுகள் கட்டுவதற்கான தொகையில் 30% சதவிகித்தை பயனாளிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளவும், பயனாளிகளுக்கு வங்கிகளிடமிருந்து மாநகராட்சி மூலம் கடன் பெற்றுத் தர ஆவண செய்யவும் பின் பயனாளிகளே திருப்பி செலுத்தவும், மேற்கண்ட திட்டத்தில் சாலை, பாதாளச் சாக்கடை மற்றும் இதர உட்கட்டமைப்பு பணிகளை மேம்படுத்துவதற்கு மாநகராட்சி பங்கான 30% தொகையினை தற்போதுள்ள மாநகராட்சியின் நிதிநிலைமையை கருத்தில் கொண்டு மென் கடன் (Soft Loan) TUFIDCO மற்றும் TNUFISL மூலும் பெறுவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>**மாமன்ற தீர்மானம் எண் : 26**</u>

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 8) <u>Jn.S1/ 33923 / 07</u>

மதுரை மாநகரிலுள்ள பகுதிகளுக்கு தேவைப்படும் குடிநீர் வைகை அணையிலிருந்து குழாய் மூலம் அரசரடி நீரேற்று நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. வைகையாற்றில் நீரோட்டம் இருக்கும் போது மட்டும் வைகை ஆற்றுப்படுகையிலுள்ள மேலக்கால், கோச்சடை மற்றும் திருப்புவனம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் ஆதாரங்களின் மூலம் குடிநீர் கிடைக்கும். மேற்கண்ட குடிநீர் ஆதாரங்களை வளப்படுத்தி ஆண்டு முழுவதும் குடிநீர் கிடைக்கும் வகையில் மேலக்கால், கோச்சடை மற்றும் திருப்புவனம் ஆகிய இடங்களில் தடுப்பணைகள் கட்டும் திட்டத்தை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் ரூ. 4.77 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த மத்திய அரசால் 22.02.07ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு வரும் செலவினை 50 % மத்திய அரசு மானியமாகவும், 20% மாநில அரசு மானியமாகவும், 30% மாநகராட்சியின் பங்குத்தொகையாக பெற்று செயல்படுத்துமாறும் ஒப்புதல் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான மாநகராட்சியின் பங்குத் தொகையினை அரசு சார்ந்த நிதி நிறுவனங்களிடமிருந்து கடனாக பெற்று செயல்படுத்துவதற்கும், வைகையாற்றில் தடுப்பணைகள் கட்டும் திட்டத்தினை பொதுப்பணித்துறையின் மூலம் செயல்படுத்துவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>**மாமன்ற தீர்மானம் எண் : 27**</u>

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 9) <u>Jn.S1/ 01080 / 07</u>

மதுரை மாநகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் முறையாக செயல்படுத்த ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டு விரிவான மதிப்பீடு ரூ. 74.29 கோடிக்கு தயார் செய்து மத்திய அனுமதிக்கும் மற்றும் கண்காணிப்பு குழுவின் மூலம் 02.02.07 ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை மாநகராட்சி செயல்படுத்த ஏற்கனவே மாமன்ற தீர்மானம் எண். 390, நாள். 15.03.07 ன் மூலம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டத்தை முபமையாக நல்ல முறையில் பராமரித்து இயக்க ஆகும் செலவினத் தொகையினை உபயோகிப்பாளரிடமிருந்து (User Charges) மூலம் வசூல் செய்து சமன் செய்ய, வேண்டும் என மத்திய அரசு, மாநில அரசு மற்றும் மதுரை மாநகராட்சி இணைந்து கட்டாய சீர்திருத்தம் மூலம் அமுல் படுத்தவும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி இத்திட்டத்தினை ஒப்புதல் செய்யும் போது பராமரித்து இயக்கும் செலவினை கீழ்கண்டவாறு உபயோகிப்பாளரிடம் வசூல் செய்ய கேட்டுக் கொள்ளப்பட்டுள்து.

| வரி விதிக்கப்பட்டுள்ள குடியிருப்புகள் | நாள் ஒன்றுக்கு ரூ. 0.50 வீதம் |
|---|---|
| **உணவு விடுதி மற்றும் உணவகங்கள்:**<br>வகுப்பு A | **நாள் ஒன்றுக்கு ரூ.**<br>**200** |
| வகுப்பு B | **150** |
| வகுப்பு C | **120** |
| **திருமண மஉறால்** | |
| பிரிவு 1 | **100** |
| பிரிவு 2 | **50** |
| பிரிவு 3 | **40** |
| பிரிவு 4 | **35** |
| பிரிவு 5 | **30** |

| | |
|---|---|
| **முரத்துவமனைகள்** | |
| மிகப் பெரிய | **150** |
| நுடத்தர | **100** |
| சிறிய | **50** |
| **சிறு தொழில் நிறுவனங்கள்** | **50** |
| **தங்கும் விடுதிகள்** | |
| 25 அறைகளுக்கு மேல் | **50** |
| 25 அறைகளுக்கு கீழ் | **25** |
| **திரையரங்கங்கள்** | **150** |
| **தொழில் & அலுவலக வளாகங்கள்** | **100** |
| **பிற சிறு நிறுவனங்கள்** | **25** |

மேற்கண்ட வரி விதிப்பினை சொத்து வரியுடன் வசூல் செய்யவும் மேலும் ஐந்தாண்டுக்கு ஒரு முறை 5% உயர்வு செய்து வசூல் செய்யும் மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 28**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 10) மதி1/ 2516 / 02

மதுரை மாநகராட்சிக்குச் சொந்தமான சர்வே வார்டு எண் **10** பிளாக் எண் **79**, சர்வே எண் **277**(P), அண்ணா பேருந்து நிலைய வளாக இடத்தினை அரசு இராசாசி மருத்துவமனை விரிவாக்கத்திற்கு ஒதுக்ககோரிய மதுரை அரசு இராசாசி மருத்துவமனை முதல்வரின் **22.09.2003**ம் தேதிய ந.க.எண்.16436/தி.வ./2002 எண்ணிட்ட கடிதத்தின்படி பேருந்து நிலையத்தின் கிழக்கு பகுதியிலுள்ள நகர பேருந்து நிலையத்தினை நிலை நிறுத்தியும் மேற்கு பகுதி இடத்தில் சுமார் **2.52**ஏக்கர் இடத்தினை அரசு இராசாசி மருத்துவமனை விரிவாக்கத்திற்கும் மருத்துவ ஆராய்ச்சியை ஊக்கப்படுத்துவதற்கும் தென் மாவட்ட மக்கள் நலன் கருதியும் இலவசமாக வழங்க மாமன்றத்தீர்மான எண் **537** நாள் : **22.02.06**ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அரசு இராசாசி மருத்துவமனை விரிவாக்கத்திற்கு **2.52** ஏக்கர் நிலம் போதுமானதாக இல்லை என்பதால் மொத்தம் உள்ள **3.12** ஏக்கர் நிலத்தை வழங்கக் கோரியுள்ள அரசு இராசாசி மருத்துவமனை முதல்வரின் **5.09.06**ம் தேதிய 16436/P&D/**2002** எண்ணிட்ட கடிதம் வாசிக்கப்பட்டு, அண்ணா பேருந்து நிலையத்தின் பனகல் சாலை ஒட்டியுள்ள மாநகராட்சியால் கட்டப்பட்டுள்ள வணிக வளாக கட்டிடத்தை நிலை நிறுத்தி எஞ்சியுள்ள **2.88** ஏக்கர் இடத்தை அரசு இராசாசி மருத்துவமனை விரிவாக்கத்திற்கு முதல்வர் மதுரை அரசு இராசாசி மருத்துவமனைக்கு இலவசமாக வழங்க மாமன்றத் தீர்மான எண் 268/நாள்**07.09.06** ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில் தற்போது வணிக வளாகட்டிடமாக உள்ள பகுதியான **0.24** ஏக்கர் நில பகுதியையும் சேர்த்து **3.12** ஏக்கர் நிலத்தை மருத்துவமனை விரிவாக்கத்திற்கு தரவேண்டும் என மதுரை மாவட்ட ஆட்சியர் தமது நேர்முக கடித எண் C.A(E) 30/2007 நாள் **28.03.07**ல் கேட்டுக் கொண்டுள்ளார்கள். ஆகவே ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட **2.88** ஏக்கர் நிலத்துடன் **0.24** ஏக்கர் கட்டிடப்பகுதியையும் சேர்த்து மொத்தம் **3.12** ஏக்கர் நிலத்தையும் சேர்த்து மதுரை அரசு இராசாசி மருத்துவமனை விரிவாக்கத்திற்கு தர மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 29**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 11) ம.நி1 / 12330 /07

மதுரை மாநகராட்சி சுகாதார ஆய்வாளர் சங்கத்தினர் தங்களது 18.4.2007–ந் தேதிய கோரிக்கை மனுவில், கடந்த 1996–ம் ஆண்டில் சென்னை தவிர்த்து பிற மாநகராட்சிகளுக்கு புதிய பணியமைப்பு விதிகள் தோற்றுவிக்கப்பட்ட போது, பொது சுகாதாரப் பணியில் முந்தைய பணியமைப்பு விதிகளில் இடம் பெற்றிருந்த சுகாதார அலுவலர் (Sanitary Officers) பணியிடம் இடம் பெறாத நிலையில், தங்களுக்கு பதவி உயர்வுக்கு வாய்ப்பு இல்லையெனவும், சுகாதார ஆய்வாளர் ஆக பணியில் சேர்ந்து அதே நிலையில் ஓய்வு பெறும் நிலை உள்ளதாகவும், புதிதாக சுகாதார அலுவலர் பணியிடம் தோற்றுவிக்க அரசுக்கு பரிந்துரை செய்யக் கோரியுள்ளனர். தமிழ்நாடு மாநகராட்சி பொது சுகாதார பணியமைப்பு விதிகளில் “ சுகாதார அலுவலர்” பணியிடம் இடம்பெறவில்லை.

தற்போது மாநகராட்சியில் உள்ள 72 வார்டுகள் நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு உள்ளன. தினசரி காலை நடைபெறும் துப்புரவுப் பணிகளை கண்காணிக்க வார்டு **1–**க்கு ஒரு துப்புரவு ஆய்வாளர் மற்றும் துப்புரவுப்பணி மேற்பார்வையாளர்கள் உள்ளனர்.

மாநகராட்சிக்கு அனுமதிக்கப்பட்டுள்ள 24 சுகாதார ஆய்வாளர் பணியிடங்களில் தற்போது 36 சுகாதார ஆய்வாளர்கள் பணிபுரிகின்றனர். இதில் 7 சுகாதார ஆய்வாளர்கள் உணவு ஆய்வாளருக்கான பயிற்சி பெற்றவர்கள். மேற்படி நான்கு மண்டல அலுவலகங்களில் தினசரி காலை நடைபெறும் சுகாதார துப்புரவுப் பணிகளை ஒருங்கிணைத்து, மேற்பார்வையிடவும் சுகாதார ஆய்வாளர்கள் அன்றாடம் பார்த்து வரும் பணிகள், பிறப்பு, இறப்பு பதிவு , டி& ஓ லைசென்ஸ் கட்டணம் வசூலித்தல் மற்றும் உணவு கலப்படம் ஆய்வு போன்ற பிற பணிகள் மற்றும் துப்புரவு ஆய்வாளர், துப்புரவு பணி மேற்பார்வையாளர்களின் பணிகளையும், கண்காணிக்கவும், சுகாதார ஊழியர் பணியமைப்பு தொடர்பான கோப்புகள் பணிப்பதிவேடுகளை சரிவர முழுமையாக கண்காணித்து மண்டல உதவி ஆணையர் ஒப்புதலுக்கு

அனுப்பிவைக்கவும், இப்பணிகளில் உதவி ஆணையாளர் மற்றும் பிற சுகாதார பணியாளர்களுக்கு இடையே ஒரு பாலமாக இருந்து நிர்வாகத்தையும், வார்டு பணிகளையும் சீராக நடைபெற மண்டலம் ஒன்றுக்கு ஒரு சுகாதார அலுவலர் வீதம் நான்கு சுகாதார அலுவலர் பணியிடங்களை தோற்றுவிப்பது அவசியமான ஒன்றாக உள்ளது.

தமிழ்நாடு மாநகராட்சி பொது சுகாதாரப்பணி சார்நிலை பணியமைப்பு விதிகள் 1996–ல் சுகாதார ஆய்வாளர் பணியிடம் Class III, Group I, Category-I–ல் சம்பள விகிதம் 4500-125-7000 ஆகும்.

தற்போது சுகாதார ஆய்வாளர்களை சுகாதார அலுவலராக பணிஉயர்வு மூலம் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

Class - III
Group – I
Category - I - சுகாதார அலுவலர்
Category - II - சுகாதார ஆய்வாளர்

மேற்காணும் "சுகாதார அலுவலர்" பணியிடத்திற்கு 5900-200-9900 என சம்பள விகிதம் நிர்ணயம் செய்யலாம். சுகாதார ஆய்வாளர்களை பணி உயர்வு மூலம் சுகாதார அலுவலர்களாக நியமனம் செய்யப்படும்போது கூடுதல் செலவினம் மிகக் குறைந்த அளவே ஏற்படும்.

எனவே சுகாதார ஆய்வாளர்களாக பணியேற்று, சுகாதார ஆய்வாளர்களாகவே ஓய்வு பெறும் நிலையை தவிர்க்கும் பொருட்டு, அன்னார்களின் கோரிக்கையின்படி, மாநகராட்சியின் நான்கு மண்டல துப்புரவுப் பணிகளை கண்காணிக்கும் பொருட்டும் நான்கு "சுகாதார அலுவலர்" (Sanitary Officer) பணியிடங்களை தோற்றுவிக்க அரசினருக்கு பரிந்துரை செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 30</u>**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 12) <u>மதி.1/ 9219 / 07</u>

**மதுரை மாநகராட்சி எல்லைக்குள் அரசு புறம்போக்கு நிலங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாக ஆக்கிரமிப்பு செய்து குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்க அரசாணை நிலை எண் 854 வருவாய்த்துறை 1(2) நாள் 30.12.06ல் உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்பேரில் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் ந.க.எண்.4284/07/ஜே.4 நாள் 21.02.2007 ஆம் தேதிய கடிதத்தில் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளவர்களின் பட்டியலுடன் இணைத்து, தகுதியுள்ளவர்களுக்கு வீட்டு மனை பட்டா வழங்க உரிய பரிந்துரையுடன் அனுப்பி வைக்க கேட்டுக்கொண்டுள்ளார்கள்.**

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ள படி தகுதியுள்ள இனங்களுக்கு பட்டா வழங்க சிபாரிசு செய்தும் மாநகராட்சிக்கு தேவைப்படும் இடங்களுக்கு பட்டா வழங்க கூடாது என சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. எனவே பட்டியலில் குறிப்பிட்டுள்ள இடங்களுக்கு பட்டா வழங்க பட்டியலில் சிபாரிசு செய்துள்ளவாறு சான்று வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 31</u>**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது. மேலும் விடுபட்டுள்ள அனைத்து பகுதிகளையும் ஆய்வு செய்து பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது என தீர்மானிக்கிறது.**

## 13) <u>அ.7 / 7968 / 2007</u>

மதுரை மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும் கிருஷ்ணாபுரம் நெசவாளர் காலனி நடுநிலைப்பள்ளியில் 300 மாணவ மாணவியர்கள் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர் 8-ம் வகுப்பு முடித்தபின் 9 மற்றும் 10-ம் வகுப்பு பயில வேறு உயர்நிலைப்பள்ளிகள் அருகில் இல்லாததால், தொடர்ந்து கல்வி கற்க இயலாத நிலை உள்ளது. இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த போதுமான மாணவ மாணவியர் உள்ளனர். எனவே மாணவ மாணவியர் நலன் கருதி கிருஷ்ணாபுரம் நெசவாளர் காலனி நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்த கல்விக்குழுவின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்பட்டதில், கல்விக்குழுத் தீர்மானம் எண். 53, நாள். 16.4.2007-ல் ஆணையாளரின் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டு, நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வாசிக்கப்பட்டு மேற்படி கிருஷ்ணாபுரம் நெசவாளர் காலனி நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தவும், மக்கள் பங்களிப்புத் தொகை ரூ.1,00,000/- (ஒரு லட்சம்) மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து செலுத்தவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 32</u>**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

14) **<u>ம.வ.4 / 04605 / 2007</u>**

மதுரை மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட ஸ்காட் ரோடு தலைமை தபால் நிலையம் அருகில் உள்ள கடை எண். 67-ன் லைசென்ஸ்தாரர் மேற்படி கடையின் அருகில் உள்ள காலியிடத்தை விஸ்தரிப்பாக பாவித்து, மேற்படி கடையுடன் சேர்த்து கொள்ள கோரும் மனு பரிசீலிக்கப்பட்டு, மேற்படி இடம் பார்வையிடப்பட்டதில் மேற்படி கடை எண்.67க்கு வலதுபக்கம் 3x6 அளவுள்ள காலியிடத்தை பொதுமக்கள் சிறுநீர் கழித்து அசுத்தப்படுத்துவதால், மேற்படி காலியிடத்தை 3x6=18 ஒரு சதுர அடிக்கு ரூ.18 வீதம் 18 சதுர அடிக்கு ரூ.326/-ஐ ஏற்கனவே உள்ள வாடகையுடன் சேர்த்து கூடுதல் வாடகையாக நிர்ணயம் செய்தும் மற்றும் திரும்ப தரப்படாத டெபாசிட்டாக ரூ.60,000/-ம் பெற்றுக் கொண்டு, கடை எண். 67 லைசென்ஸ்தாரருக்கு மேற்படி காலியிடத்தை வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 33</u>**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

15) **<u>மே.ம.பொ.3 / 03497 / 2007</u>**

மதுரை மாநகராட்சி வார்டு 26 சிஸ்டர் ரோஸ் மெயின் வீதி மேலப்பொன்னகரம் 5வது தெருவில் உள்ள திருக்குடும்பப் பள்ளி வளாகத்திற்குள் அமைந்துள்ள கிறிஸ்தவ ஆலயத்திற்கு இலவச குடிநீர் இணைப்பு வழங்கக் கோரியுள்ள திருக்குடும்ப கன்னியர் இல்லம் சுப்பிரியர் சகாயமேரி அவர்களின் கடிதம் பரிசீலிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட உதவிப் பொறியாளர் நேராய்வு செய்து அளித்துள்ள குறிப்பின் படியும், மதுரை மாநகராட்சி குடிநீர் விநியோகம் துணை விதிகள் 13 (எ) (பி)-ல், தெரிவிக்கப்பட்டுள்ள விபரப்படி சிறிய கோவில்கள், பள்ளிவாசல்கள், மாதா கோவில்கள் இவைகளுக்கு ஒவ்வொன்றுக்கும் ஒரு குழாய் வீதம் கட்டணமில்லாமல் வைத்துக் கொள்ள அனுமதிக்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாலும் சம்பந்தப்பட்ட கிறிஸ்தவ இறைவழிபாட்டு தலத்திற்கு இலவச குடிநீர் இணைப்பு வழங்குவது தொடர்பாக மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 34</u>**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

16) **<u>ம.தி.2/ 12154 / 07</u>**

மதுரை தமிழ்நாடு பண்பாளர் பி.டி.ஆர்.பழனிவேல் ராஜன் நினைவு அறக்கட்டளை சார்பாக இந்தியன் ஆயில் கார்பரேசன் அருகில் கோகலே ரோடு, புதுநத்தம் ரோடும் சந்திக்கும் இடத்தில் உள்ள ரவுண்டாவில் முழு உருவ வெண்கல சிலை அமைக்க கோரியுள்ளனர்.

மேற்படி சிலை அமையவுள்ள இடம் மதுரை மாநகராட்சி எல்கைப்பகுதியில் அமைவதால் சிலை அமைக்க மாமன்றத்தின் ஆட்சேபணை ஏதும் இல்லை என்பதற்கு தீர்மானம் நிறைவேற்றி தீர்மான நகலினை அனுப்புமாறு ந.க.சி.3.116800/2006-1 நாள் :**10.04.2007–ல்** மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

எனவே, மறைந்த முன்னாள் அறநிலையத்துறை அமைச்சர், மாண்புமிகு பண்பாளர் திரு.பி.ஆர்.பழனிவேல் ராஜன் அவர்களின் திருவுருவச்சிலை இந்தியன் ஆயில் கார்பரேசன் அருகில் கோகலே ரோடு, புதுநத்தம் ரோடும் சந்திக்கும் இடத்தில் உள்ள ரவுண்டாவில் முழு உருவ வெண்கல சிலை அமைக்க தடையின்மை சான்று வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் : 35</u>**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

17) <u>ம.தி.2/ 12924 / 07</u>

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர்களின் ஒருவராக இருந்தவரும் அமரர் திரு.பி.ராமமூர்த்தி அவர்களுக்கு அன்னாரது நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கீழ்காணும் இடங்களில் ஒரு இடத்தில் அவரது திருவுருவச்சிலையை நிறுவ இந்திய தொழிற்சங்க மையத்தின் மதுரை மாநகர மாவட்ட குழுவால் அனுமதி கோரப்பட்டுள்ளது.

1. புறவழிச்சாலை காளவாசல் ரவுண்டான,
2. தமுக்கம் கலையரங்க நுழைவாயில் அருகில்
3. காமராஜர் சாலை தியாகராஜர் கலைக்கல்லூரி எதிர்புறம் (தெப்பக்குளம்) உள்ள பூங்கா

மேற்படி விண்ணப்பத்தில் கண்டுள்ள கோரிக்கையின் மீது மாமன்றத்தின் முடிவிற்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண் : 36</u>

**பொருளில் குறிப்பிட்டுள்ள மூன்று இடங்களில், ஒரு இடத்தில் சிலை நிறுவ பரிந்துரைத்து அரசுக்கு அனுப்பி வைக்க தீர்மானிக்கிறது.**

(ஒம்...) ஜி. தேன்மொழி

மேயர்

மதுரை மாநகராட்சி

மதுரை

நாள் : 23.4.2007